மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

# A Comparison of Myth and Smiruthi in Bharathi Poets and Paatiyal Text

**Dr. G. Lakshmidevi**

**Assistant Professor and Head, Department of Tamil, Sanghamam College of Arts and Science, Annamangalam, India**

Manuscript ID :
**MT112A0046**
Volume : **2**
Issue : **3**
Month : **September**
Year : **2022**
Received: 27.09.2022
Revised: 28.09.2022
Accepted: 29.09.2022
Published: 30.09.2022
Pages : 52-61
DOI:
10.5281/zenodo.7371704

BY NC SA

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 4.0 International (CC BY-NC-SA 4.0) International License

OPEN ACCESS

## ABSTRACT:

Bharathiyar voiced to fight for defending our self right through his lyrics during 20th century. His Lyrics referred to earlier literary genres such as Myth and Smiriti. Mythology and Smiriti belongs to literary Prabantha. The Hypothesis of the study is that Bharathiyar contradicted the notion of Tamil Paattiyal Grammar text and Smiriti and contradicted them. This article is a Research compilation of Bharathiyar Lyrics and Tamil Paatiyal Texts.

## KEYWORDS:

Bharathi, Myth, Smiruthi, Tamil Paattiyal Grammar (Tamil grammar Texts)

# பாரதியார் பாடல்கள், பாட்டியல் பனுவல்கள்: புராணங்கள், ஸ்மிருதிகள் ஒப்பீடு

**முதுமுனைவர். கோ. லட்சுமிதேவி,**
*உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,*
*தமிழ்த்துறை, சங்கமம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அண்ணமங்கலம், இந்தியா*

## கட்டுரைச் சுருக்கம்

**இருபதாம் நூற்றாண்டில், சுய உரிமைகளைக் காப்பதற்குப் போராட வேண்டுமென்று குரல் கொடுத்தது பாரதியார் பாடல்கள் ஆகும். இவருடைய பாடல்களில், இதற்கு முன் எழுதப்பட்ட இலக்கிய வகைகளைப் பற்றிய சில விமர்சனங்களைத் முன்வைத்துள்ளார். அவ்வகையில் புராணம், ஸ்மிருதி என்ற இலக்கிய வகைகளைப் பற்றி கூறியுள்ளார். தமிழிலுள்ள இலக்கண நூல்களானப் பாட்டியல் பனுவல்கள், புராணம் மற்றும் ஸ்மிருதி ஆகிய இரண்டும் பிரபந்த இலக்கியங்களுள் ஒன்று என்று கூறியுள்ளன. புராணம், ஸ்மிருதி பற்றியப் பாட்டியலின் கருத்துக்களை மறுத்து அதற்கு முரணானக் கருத்துக்களைப் பாரதியார் கூறியுள்ளார் என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும். பாரதியார் பாடல்களையும் பாட்டியல் பனுவல்களையம் ஒப்புமைப்படுத்தி ஆராயும் விதமாக ஒப்பீட்டு முறையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.**

## கருச்சொற்கள்

**பாரதி, புராணம், ஸ்மிருதி, தமிழ் பாட்டியல் இலக்கணம்**

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கிய இலக்கியப் பனுவல் பாரதியார் பாடல்கள் ஆகும். பாரதியின் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணங்களில், சமூகத்தின் சமகால நகர்வைப் பற்றியச் செய்தியொன்றைத் தொட்டுச் செல்கின்றன. கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியையும், கி.பி. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தையும் இணைக்கும் பாலமாக இருந்த தமிழ் இலக்கிய வகைப் புராண இலக்கியங்கள் ஆகும். இத்தகைய 'புராணங்களைப்' பற்றியும், அதோடு புராணத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியான 'ஸ்மிருதி' என்பதைக் குறித்தும் தம் பாடல்களில் விளக்கியுள்ளார். தமிழ் இலக்கிய வரலாறுகளை ஆராய்ந்தால் புராணம், ஸ்மிருதி என்பவைகளை, ஒரு தனி இலக்கிய வகையாகப் பாட்டியல் இலக்கணங்கள் கூறியுள்ளன. ஆகவே பாரதி பாடல்கள் மற்றும் பாட்டியல் இலக்கணப் பனுவல்களில்

கூறப்பட்டுள்ள புராணம், ஸ்மிருதி பற்றிய தரவுகளை ஒப்பிட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## புராணம் மற்றும் ஸ்மிருதி - பொருண்மையும் இலக்கணமும்

தமிழ் இலக்கிய வரலாறுகள் காப்பியங்களுள் ஒரு பிரிவாகப் புராணங்களை அறிமுகப்படுத்துகின்றன. சில காப்பியங்கள் குடிமக்களைப் பற்றியதாகவும் (ஐம்பெரும், ஐஞ்சிறுங் காப்பியங்கள்) புராணங்கள் கடவுளடியவர்களின் வரலாறுகளைப் பற்றியதாகவும் (பெரியபுராணம்) எழுதப்பட்டுள்ளன. கடவுளைப் பற்றிய கதைகளைக் கூறும் புராணங்கள் இதிகாசங்கள் (இராமாயணம், மகாபாரதம்) என்றும் அழைக்கப்படுகின்றன.

பொதுவாகப் புராணம் என்றால் பழங்கதைகள் என்று கூறுவர். புராணம் என்ற சொல், "புரா, நவ" என்ற இரு வடமொழி வேர்ச் சொல்லிலிருந்து தோன்றிய சொல் என்று வடமொழியாளர்கள் கூறுவர். புராண இலக்கிய வரலாற்றில் மருததுறை அவர்கள்," **'புராணவித்', 'புராணி' போன்ற சொற்கள் ரிக் வேதத்திலும் அதர்வண வேதத்திலும் காணப்படுகின்றன. எனினும் அச்சொல் புராணத்தைக் குறிக்கவில்லை. பழமையானவன், பழமையைப் பரப்புகிறவன் என்ற பொருளிலேயே வழங்கியிருக்கின்றன"**[1] என்று கூறியிருப்பதாகக் கூறுவார் இரா. பாலசுப்பிரமணியன்.

யாழ்ப்பாணம் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள், **"உலகத்தினது தோற்றமும், ஒடுக்கமும், பாரம்பரியங்களும், மனுவந்தரங்களும், பாரம்பரிய கதைகளும் ஆகிய இவ்வைந்தையுங் கூறலால் பஞ்சலக்ஷணமெனப்படுவது"**[2] புராணம் என்கிறார். இவர் "ஸ்மிருதிகள்" என்பதற்கு, **"வேதார்த்தங்களைத் தழுவிய தரும சாஸ்திரங்கள்"**[3] என்று கூறுவார்.

அபிதான சிந்தாமணி, புராணங்களின் தோற்றம் பற்றிக் கதையொன்றைக் கூறியுள்ளது. **"ஸ்ரீ சிவமூர்த்தியினிடம் இவைகளைக் கேட்ட நந்திமாதேவர், சநற்குமார முனிவருக்கு உபதேசிக்க அவர் வியாசருக்கு உபதேசிக்க, வியாச பகவான் சூதருக்கு உபதேசித்தனர். இப்புராணங்கள் பதினெண் வகைப்படும்"**[4] என்கிறது அபிதான சிந்தாமணி. மேலும் **"புராணலக்ஷணம் - இவை சர்க்கம், பிரதி சர்க்கம், மனுவந்தரம், வம்சம், வம்சாநுசரிதம், ஸ்திதி, ரக்ஷணம், சமுஸ்தை, ஏது, ஆசிரயம், இப்பத்து லக்ஷணங்களையுடையன. இது கிருதயுகத்தில் நூறுகோடி கிரந்தங்களாகப் பிரம்மனாலும், திரேதாயுகத்தில் கோடி கிரந்தங்களாய்ப் பதினெண் பாகங்களாக இருடியாலும், துவாபரயுகத்தில் வியாசராலும் பதினெண் புராணங்களாகவும் வகுக்கப்பட்டது"**[5] என புராணத்திற்கான இலக்கணத்தையும் கூறியுள்ளது.

மெய்யப்பன் தமிழ் அகராதி, **“பழைமை, தொன்மம், பழங்கதை வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்தும் நூல், கோயிலிற் புராணம் படிப்பதற்கு விடப்பட்ட மானியம்”**[6] என்று புராணத்திற்குப் பொருள் கூறுகின்றது. ஆங்கிலத்தில் புராணம் என்பதை “Myth” என்ற சொல்லார் குறிப்பர். “Mythos” என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து அச்சொல் உருவானதாகக் கூறுவர். “The word is derived from the Greek word Muthos, which means word or speech and is akin to our word mouth”[7].

மேற்கண்ட தரவுகளைக் காணும்போது, புராணம் என்பவை கடவுள் பெயரால் சொல்லப்படும் பழங்கதைகள் என்றும் அதன் அடுத்த இலக்கிய வடிவம் ஸ்மிருதி என்றும் இலக்கியவியலார் பொருள் கொள்ளுவது விளங்குகின்றது.

## பாரதியார் பாடல்கள் மற்றும் பாட்டியலில் ‘புராணம்’

புராணங்கள் பெரும்பாலும் கடவுளை மையமிட்டு எழுதப்பட்டவைகளாய் இருக்கின்றன. அக்காலத்தில் கடவுள் பெயரில் எதைக் கூறினாலும் நம்புகிற மக்கள் பெரும்பான்மை இருந்தனர். இனக்குழு சமுதாயத்தில் கடவுள் கொள்கையையே தத்தம் இனக்குழுக்களை அடையாளப்படுத்தும் ஆதாரமாக மக்கள் நம்பினர். கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரை இச்சூழல் தமிழ் இலக்கியங்களில் பிரதிபலித்தது. இருபதாம் நூற்றாண்டில் பாரதியார் தன்னுடைய பாடல்களில், இந்நம்பிக்கை உண்மையல்ல, ‘கற்பனை’ என்ற கருத்தை முன்வைத்தார். பாரதியார் ‘சமூகம்’ என்ற தலைப்பின் கீழ் எழுதிய, ‘எங்கள் மதம்’ என்ற பாடலில், புராணங்கள் கடவுளைப் பற்றியது என்பதற்கு,

**“உண்மையின் பேர்தெய்வம் என்போம் - அன்றி**
**ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்**
**உண்மைகள் வேதங்கள் என்போம் - பிறிது**
**உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்”**[8]

என்று கூறியுள்ளார். கடவுள் பொய்யாகப் புனையப்பட்ட கற்பனை என்றும், உண்மைகளே வேதங்கள் என்றுங் கூறி மறைகளெல்லாம் வெறுங்கதைகள் என்கிறார். இக்கவிதைக்குப் புராணங்கள் என்று தலைப்பிட்டுள்ளார்.

இந்துக்களின் மிக முக்கிய நூலாகக் கருதப்படும் இராமாயணம் என்ற இதிகாசம் மனிதனின் கற்பனையால் எழுதப்பட்டதே என்கிறார் பாரதி.

**“கடலினைத் தாவும் குரங்கும் - வெங்**
**கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்**
**வடமலை தாழ்ந்தத னாலே - தெற்கில்**

**வந்து சமன் செய்யும் குட்டை முனியும்**
**நதியினுள் ளேமுழு கிப்போய் - அந்த**
**நாகர் உலகிலோர் பாம்பின் மகளை**
**விதியுற வேமணம் செய்த - திறல்**
**வீமனும் கற்பனை என்பது கண்டோம்”**[9]

என்ற பாடலடிகள் இதனை உணர்த்துகின்றன. புராணங்கள் இயற்றப்பட்ட தன்மைகளை கூறும்போது,

**“ஒன்றுமற் றொன்றைப் பழிக்கும் - ஒன்றில்**
**உண்மையென் றோதிமற் றொன்றுபொய் யென்னும்**
**நன்றுபு ராணங்கள் செய்தார் - அதில்**
**நல்ல கவிதை பலபல தந்தார்”**[10]

என்கிறார். புராணங்கள் ஒன்று மற்றொரு புராணக்கதையை மறுத்துப் பொய் என்றுக் கூறுமாறு படைக்கப்பட்டிருக்கும் என்கிறது இப்பாடல். புராணக் கதைகள் அனைத்தும் கட்டுக்கதைகள் ஆகும். புராணக்கதைகள் குறித்தக் கதைகள் நன்றாக இருந்தாலும் அவை பொய்யானக் கதைகள் என்கிறார் பாரதியார்.

**“கவிதை மிகநல்ல தேனும் - அக்**
**கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்**
**புவிதனில் வாழ்நெறி காட்டி - நன்மை**
**போதிக்கும் கட்டுக்கதைகள் அவைதாம்”**[11]

என்ற பாடலடிகள் இதனைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளன.

வெண்பாப் பாட்டியல், பெருங்காப்பியம், சிறுங்காப்பியம், புராணம் ஆகிய மூன்றும் சில ஒற்றுமைகளை உடையன என்கிறது.

**“கருதுசில குன்றினுமக் காப்பியமா மென்பர்**
**பெரிதறமே யாதி பிழைத்து - வருவதுதான்**
**காப்பிய மாகுங் குலவரவு காரிகை**
**யாப்பிற் புராணமே யாம்”**[12]

இந்நூற்பாவின் வழி தமிழ் இலக்கிய வரலாறுகளும் புராணம், காப்பியம், இதிகாசம் ஆகியவற்றை காப்பியம் என்ற வகைக்குள்ளேயே வைத்துப் பார்க்கின்றன. சிதம்பரப் பாட்டியல்,

**“---------புராணம் ஆகும்**
**பேச்சின் முதல் நால்பொருளொடு அளவு தன்மை**
**செறிமிகுதி செய்வித்தோன் கருத்த னானும்**
**திகழும்இடு குறியானும் நூற்குப் பேராம்**
**உறுகலிவஞ் சிப்பாக்கை யறத்துக்கு ஆகா**
**உரைப்பதுஇனி வாழ்த்தினுக்குஎப் பாவும் ஆமே”**[13]

என்று கூறி நாற்பொருளில் ஒன்றோ இரண்டோ குறையின் அது சிறுகாப்பியம் என்கிறது.

பிரபந்த தீபிகை என்னும் பாட்டியல் பனுவல், பதினெட்டுப் புராணங்களின் பெயர்களைக் கூறியுள்ளது.

**“பதுமன் பத்தஞ் சுவராக மூவெட்டு**
**பாகவத மீரொன்பதாம்”**[14]

என்று தொடங்கும் பிரபந்த தீபிகை நூற்பா, பத்ம புராணம், பாகவத புராணம், பவிசிய புராணம், லிங்க புராணம், மச்ச புராணம், பிரம்ம புராணம், மார்க்கண்டேய புராணம், வாமன புராணம், கூர்ம புராணம், பிரமாண்ட புராணம், அக்னி புராணம், சிவ புராணம், விட்ணு புராணம், கருட புராணம், நாரத புராணம், கந்த புராணம், பிரம்ம வைவர்த்த புராணம், வாமன புராணம் ஆகிய பதினெட்டு புராணங்களின் பெயர்களின் தொகுப்பைக் கூறியுள்ளது. இப்பதினெட்டுப் புராணங்களும் பின் மகாபுராணங்கள் என்று அழைக்கப்பட்டன. இவை வியாசரால் தொகுக்கப்பட்டவை என்பர்.

மகாபுராணங்களுக்கு ஐந்து தகுதிகள் இருக்க வேண்டும் என்று புராணவியலார் கருதுவர். “இவை மகா புராணங்களின் தகுதியான பேரண்டப் படைப்பு, பிரளயம் மூலம் உலக அழிவும், மறுபடி தோற்றமும், வெவ்வேறு மன்வந்தரங்கள், சூர்ய வம்ச, சந்திர வம்ச வரலாறு, அரச பரம்பரைகள் சரிதம் ஆகிய ஐந்தினையும் கொண்டதாக உள்ளது. இவைகளுள் ஒன்றோ இரண்டோ தகுதி குறைந்ததாக இருப்பவை உப புராணங்கள்”[15] என்று அழைக்கப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள பல மொழிகளிலும் பதினெண் புராணங்கள் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. வியாச முனிவரின் சீடரான, ‘ரோமஹர்ஷர்’ என்பவர் இப்பதினெண் புராணங்களோடு வாயு புராணத்தினையும் சேர்த்து 19 புராணங்கள் என்று கூறியதாகச் செவிவழிச் செய்தி ஒன்று உண்டு.

பாட்டியல் இலக்கணங்கள் புராணங்களை உயர்ந்தவைகளாகப் புனிதமானவைகளாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதோடு, புராணக் கதைகள் உண்மையானவை என்ற நம்பிக்கையை விதைக்கிறது. ஆனால் பாரதி இக்கருத்துக்கு

முற்றிலும் மாறாகப் புராணங்கள் அனைத்தும் கட்டுக்கதைகள் என்கிறார். உலகிலுள்ள உண்மையே கடவுள், உண்மையே வேதங்கள் என்று பாரதி மிக வெளிப்படையாகப் புராணம் என்ற பாடலில் கூறித் தெளிவுபடுத்துகிறார். இதிலிருந்து கி.பி. 20ஆம் நூற்றாண்டில் புதிய சிந்தனை மலர்ச்சியைக் காணமுடிகின்றது. இதற்கு முன் வரை சான்றோர்கள் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் போக்கு இருந்துள்ளதையும், பின் அது மாறி மாற்றுப் பார்வையில் சிந்திக்கக்கூடிய சமுதாயப் படிநிலையின் அடுத்தகட்ட வளர்ச்சியையும் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார் பாரதி. இவ்வாறு, இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய சிந்தனைகளோடுத் தம் பாடல்களைக் கட்டமைத்துள்ளார்.

தமிழில் முதன் முதலில், புராணங்களைத் தனி இலக்கிய வகையாகக் கூறும் நூல் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பிரபந்த மரபியல் ஆகும். தமிழிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் புராணங்களும் ஒரு வகை என்கிறது இந்நூல். ஆனால் அதற்கு முன் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'வச்சணந்திமாலை' மற்றும் 'வெண்பாப்பாட்டியல்' ஆகிய இரு நூல்களும் புராணத்தை பிரபந்த வகைகளுள் ஒன்றாகக் கூறியுள்ளன. பிறகு கி.பி. 16ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல் ஆகிய இரு நூல்களும் புராணத்தை ஒரு தனி பிரபந்தமாகக் கூறியுள்ளன. பாரதியாரும், பாட்டியல் பனுவல்களும் புராணம் பற்றி கூறியுள்ள செய்திகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

**அட்டவனை** - 1

| | பாரதியார் பாடல்கள் | பாட்டியல் பனுவல்கள் |
|---|---|---|
| புராணம் | கற்பனைப் புனைவே கடவுள் | கடவுள் என்ற பரம்பொருள் உண்டு |
| | உண்மையே கடவுள், உண்மையே வேதங்கள் | கடவுளின் உபதேசம் |
| | வேதநூல்கள் கடவுளைப்பற்றிய வெறுங்கதைகள், கட்டுக்கதைகள் | கடவுளைப் பற்றிய உண்மைக் கதைகள் |
| | புராணக்கதை ஒன்று மற்றொன்றைப் பழிக்கும் | ஒவ்வொரு புராண கதையும் ஒரு சமுதாயத்திற்கானவை |

## பாரதியார் பாடல்கள் மற்றும் பாட்டியலில் 'ஸ்மிருதி'

புராண இலக்கியங்களுக்கு அடுத்து 'ஸ்மிருதி' என்ற இலக்கிய வகைக் கூறப்படுகிறது. புராணத்திற்குரிய ஐந்து தகுதிகளில் ஒன்றிரண்டு குறைந்தால் அது 'ஸ்மிருதி' என்ற இலக்கிய வகையாகும் என்று வடமொழியாளர்கள் கருதுவர். புராணங்கள் அறக்கருத்துக்களைக் கடவுள் கதைகளாகக் கூறும். ஆனால் ஸ்மிருதி

அறக்கருத்துக்களைக் கட்டளைகளாகவும் கட்டுப்பாடுகளாகவும் கூறும். இதுவே இரண்டிற்கும் உரிய சிறிய வேறுபாடு ஆகும். தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள 'மனு ஸ்மிருதி' போன்ற நூல்களை இதற்குச் சான்றாகக் கூறலாம். எங்கள் மதம் என்ற பாடலில் பாரதியார், ஸ்மிருதிகள் குறித்து,

**"பின்னும் (ஸ்) மிருதிகள் செய்தார் - அவை**
**பேணும் மனிதர் உலகினில் இல்லை**
**மன்னும் இயரல்பின வல்ல - இவை**
**மாறிப் பயிலும் இயல்பின ஆகும்"**[16]

என்று பாடுகிறார். புராணத்திற்குப் பின்னர்தான் 'ஸ்மிருதி' என்னும் இலக்கிய வகை எழுதப்பட்டுள்ளது. இவ்வகை இலக்கியங்களைப் போற்றிப் பாதுகாப்பவர் இவ்வுலகில் எவருமில்லை என்கிறார்.

நீதிகளையும் அறங்களையும் கட்டளைகளாக எடுத்துக் கூறும் ஸ்மிருதி சாத்திரங்களல்ல. மக்களின் சதியால் உருவாக்கப்பட்டவை என்கிறார். சாதிகளிடையே இருந்த பற்றே ஸ்மிருதி இலக்கியம் தோன்றக் காரணமாக இருந்துள்ளது என்ற பாரதியாரின் நம்பிக்கையை அவருடைய பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

**"சூத்திர னுக்கொரு நீதி - தண்டச்**
**சோறுண்ணும் பார்ப்புக்கு வெறொரு நீதி**
**சாத்திரம் சொல்லிடு மாயின் - அது**
**சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்"**[17]

இப்பாடலடிகள் பாரதியின் சமூகத்தின் சமகால நகர்வையும் மாற்றங்களையும் உண்மை வரலாறுகளையும் வெளிப்படுத்தும் சான்றாகும். பிரபந்த தீபிகை என்னும் நூல் நான்கு உப வேதங்களையும் பதினெண் ஸ்மிருதிகள் இருப்பதாக அவற்றின் பெயர்களையும் கூறியுள்ளது.

**"சுருதியொரு நான்குபின் னுபவேத நான்கதின்**
**சுருதியர்க் காயுள்வேதந் - - - -"**[18]

என்று தொடங்கும் பிரபந்த தீபிகை நூற்பா, இருக்கு, சாமம், யசுர், அதர்வம் ஆகிய நான்கு வேதங்களும், சங்க ஸ்மிருதி, லிகித ஸ்மிருதி, மனு ஸ்மிருதி, கௌதம ஸ்மிருதி, சம்வர்த்த ஸ்மிருதி, பிரகஸ்பதி ஸ்மிருதி, தக்ஷ ஸ்மிருதி, யம ஸ்மிருதி, அங்கிர ஸ்மிருதி, யாஞ்ஞுவல்கிய ஸ்மிருதி, பிரதேச ஸ்மிருதி, சாதாதப ஸ்மிருதி,

பராசர ஸ்மிருதி, உசன ஸ்மிருதி, அத்திரி ஸ்மிருதி, விஷ்ணு ஸ்மிருதி, ஆபத்தம்ப ஸ்மிருதி, ஹாரித ஸ்மிருதி ஆகிய பதினெட்டு ஸ்மிருதிகள் இருந்ததாகக் கூறுகின்றன.

காலத்திற்கேற்ப புதிய இலக்கிய வகைகள் தோன்றுவதுபோல ஸ்மிருதியும் தோன்றியிருக்கிறதே தவிர அவை எக்காலத்திலும் நிலைபெற்று நிற்றல் இயலாது என்கிறார் பாரதி.

**“காலத்திற் கேற்ற வகைகள் - அவ்வக்**
**காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்**
**ஞால முழுமைக்கும் ஒன்றாய் - எந்த**
**நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை”**[19]

என்ற பாரதியின் பாடல், இதற்குச் சான்றாகும். ஸ்மிருதி பற்றி பாரதியார் பாடல்கள் மற்றும் பாட்டியல் பனுவல்கள் கூறும் செய்திகளைச் சுருங்கக் கூறின் பின்வருமாறு.

**அட்டவனை** - 2

| | **பாரதியார் பாடல்கள்** | **பாட்டியல் பனுவல்கள்** |
|---|---|---|
| ஸ்மிருதி | புராணத்தின் அடுத்தகட்ட வடிவம் | புராணத்தின் அடுத்தகட்ட வடிவம் |
| | இவ்விலக்கியங்களைப் போற்றிப் பாதுகாப்பவர் எவருமில்லை | இவ்விலக்கியங்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் |
| | நால்வருணத்தாரின் சதியினால் உருவாக்கப்பட்ட இலக்கியம் | கடவுள் உருவாக்கியது |
| | ஸ்மிருதிகள் சாத்திரமல்ல சதி | ஸ்மிருதிகள் வழிவழியாக உபதேசிக்கப்பட்ட கடவுளின் கட்டளைகள் |

மேற்கண்ட தரவுகளை வைத்துப் புராணம் மற்றும் ஸ்மிருதி பற்றி, பாரதி பாடல்கள் மற்றும் பாட்டியல் இலக்கணங்களை ஒப்பிட்டு ஆராய்ந்தால், பின்னது புனிதம் போற்றக்கூடியது என்றும் அதை மறுக்கும் பனுவல் பாரதியார் பாடல்கள் என்பதும் வெளிப்படுகின்றது. அதோடு வெகுசன மக்களின் வழிகாட்டியாகப் பாரதியின் பாடல்கள் இருக்கின்றது என்பதும் விளங்குகின்றது.

## முடிவுரை

புராணங்கள் கடவுளால் உருவாக்கப்பட்டப் புனிதத் தன்மையுடையவை என்ற பாட்டியல் பனுவல்களின் பதிவுகளுக்கு நேர் எதிரானவை பாரதியாரின் கருத்துக்கள். இவரின் பாடல்கள், “புராணங்கள்” மற்றும் “ஸ்மிருதிகள்” குறித்துத் தெளிவான வாதங்களை முன்வைக்கின்றன. இவ்விரு இலக்கிய வகைகளும் மனிதரின்

கற்பனையால் உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் ஆகும் என்கிறார் பாரதி. சாதிய ஆளுமைகள் வெளிப்படும்போது மக்கள் மூடநம்பிக்கைகளிலிருந்து வெளிவந்து அடிப்படையான உரிமைகளைக் கையிலெடுத்து அதைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுமென்கிறார். பாரதியார் பாடல்கள் வருணப் பாகுபாடுகளை எதிர்க்கிறது. பாட்டியல் பனுவல்கள் வருணப் பாகுபாடுகளை ஆதரிக்கிறது. இதிலிருந்து புராணங்கள் மற்றும் ஸ்மிருதிகள் சாதியங்களின் இருப்புக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் என்பதை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

## அடிக்குறிப்பு

1. பாலசுப்பிரமணியன் .இரா. (2003), புராணவியல் ((முதற்பதிப்பு), ப.1, காரைக்குடி: தமிழ் சக்தி பதிப்பகம்.
2. முத்துத்தம்பிப்பிள்ளை .ஆ (2018,), அபிதான கோஷம் ((முதற்பதிப்பு), ப.292, சென்னை: சாரதா பதிப்பகம்.
3. மேலது., ப.368.
4. சிங்காரவேலு முதலியார் ஆ. (2018), அபிதான சிந்தாமணி16 (ஆம் பதிப்பு), ப.1420, சென்னை: சீதை பதிப்பகம்.
5. மேலது.
6. சுப்பிரமணியன் ச.வே. (2014), மெய்யப்பன் தமிழ் அகராதி (4ஆம் பதிப்பு), ப.65, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
7. Oxford Junior Encyclopedia, p 332.
8. புராணவியல், ப.65, மேலது.
9. சுந்தரமூர்த்தி (பதி.ஆ.) இ. (2001), பாரதியார் கவிதைகள் (3 ஆம் பதிப்பு), ப.554, சென்னை: பாவை பப்ளிசேஷன்ஸ்.
10. சுந்தரமூர்த்தி (பதி.ஆ.) இ, பாரதியார் கவிதைகள், ப.554.
11. மேலது., ப. 555.
12. குணவீர பண்டிதர், (சுப்பிரமணியன் ச.வே. - பதிப்பாசிரியர்) (2013), வெண்பாப் பாட்டியல் (3ஆம் பதிப்பு), நூ.66, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
13. பரஞ்சோதியார் (ச.வே.சு. - பதிப்பாசிரியர்) (2013), சிதம்பரப் பாட்டியல் (3 ஆம் பதிப்பு), நூ. 43. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்,.
14. முத்துவேங்கட சுப்பையர், (ச.வே.சு. - பதிப்பாசிரியர்) (2013), பிரபந்த தீபிகை (3 ஆம் பதிப்பு), நூ.69, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
15. https://ta.m.wikipeadia.org.
16. சுந்தரமூர்த்தி (பதி.ஆ.) இ., பாரதியார் கவிதைகள், ப.555.
17. மேலது.
18. பிரபந்த தீபிகை, நூ.58, மேலது.
19. மேலது.

## REFERENCES

1. Bhalasubramaniyam.R, First Edition 2003, Puranaviyal, p.1, Tamil Sakthi publication, Karaikudi.
2. Muthuthambipillai.A, First Edition 2018, Abithana kosham, p.292, Saratha Publication, Chennai.
3. Muthuthambipillai.A, First Edition 2018, Abithana kosham, p.292, Saratha Publication, Chennai.
4. Singaravelu muthaliyar.A, 16th Edition, Abithana Sinthamani, p.1420, Seethai publication, Chennai.
5. Singaravelu muthaliyar.A, 16th Edition, Abithana Sinthamani, p.1420, Seethai publication, Chennai.
6. Subramaniyan.S.V., 4th Edition 2014, Meiyappan Tamil Dictionary, Manivaasagar Publication, Chennai.
7. Oxford Junior Encyclopedia, p 332.
8. Bhalasubramaniyam.R, First Edition 2003, Puranaviyal, p.65, Tamil Sakthi publication, Karaikudi.
9. Bharathiyar, 3rdEdition 2013, Bharathiyar Kavithaigal, P.554, Paavai Publications Chennai.
10. Bharathiyar, 3rdEdition 2013, Bharathiyar Kavithaigal, P.554, Paavai Publications Chennai.
11. Bharathiyar, 3rdEdition 2013, Bharathiyar Kavithaigal, P.554, Paavai Publications Chennai.
12. Gunaveera Pandithar, 4th Edition 2014, Subramaniyan.S.V., Venba Paattiyal, Meiyappan Publication, Chennai.
13. Paranjothiyar, 4th Edition 2014, Subramaniyan.S.V., Chidambara Paattiyal, Meiyappan Publication, Chennai.
14. Muthuvengada Subbaiyar, 4th Edition 2014, Subramaniyan.S.V., Prabantha Deepikai, Meiyappan Publication, Chennai.
15. https://ta.m.wikipeadia.org.
16. Bharathiyar, 3rdEdition 2013, Bharathiyar Kavithaigal, P.554, Paavai Publications Chennai.
17. Bharathiyar, 3rdEdition 2013, Bharathiyar Kavithaigal, P.554, Paavai Publications Chennai.
18. Muthuvengada Subbaiyar, 4th Edition 2014, Subramaniyan.S.V., Prabantha Deepikai, Meiyappan Publication, Chennai.
19. Muthuvengada Subbaiyar, 4th Edition 2014, Subramaniyan.S.V., Prabantha Deepikai, Meiyappan Publication, Chennai.